[30th March 1966

UNSTARRED QUESTIONS.

Stage Carriage Permits

4 *Q.*—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of stage carriage permits granted by the State Transport Authority and the Regional Transport Authorities to private operators in the State during 1964 and 1965 districtwise?

A.—

	Name of district.	Number of permits granted during 1964.	1965.
	(1)	(2)	(3)
1	Chingleput	32	8
2	Coimbatore	22	6
3	Dharmapuri	Nil.	Nil.*
4	Kanyakumari	Nil.	Nil.
5	Madurai	26	2
6	North Arcot	26	7
7	Ramanathapuram ..	10	9
8	Salem	11	Nil.
9	South Arcot	7	6
10	Thanjavur	1	5
11	The Nilgiris	3	10
12	Tirunelveli	21	12
13	Tiruchirappalli	17	20
14	State Transport Authority Madras.	Nil.	Nil.

* Separate Regional Transport Officer is functioning from 2nd October 1965 on bifurcation of the Salem district.

5 *Q.*—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of stage carriages other than spare buses, having primary permits in North Arcot district till 31st October 1965 together with their registration numbers, name of the route, seating capacity, total mileages done and the quarterly tax paid for each bus?

A.—A statement [a] is appended.

வடார்க்காடு ஜில்லாவில் மேம்பாலங்கள்

6 கேள்வி.—திரு. ர. ஜீவரத்தினம் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு ஜில்லாவில் ஓடும் நதிகளில் எத்தனை நதிகள் மீது மேம்பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன ?

(இ) எத்தனை நதிகள் மீது காஸ்வேக்கள் கட்டப்பட்டிருக்கின்றன ?

(உ) எந்தெந்த நதிகள் மேம்பாலமோ, காஸ்வேக்களோ இல்லாமல் இருக்கின்றன ?

(எ) அவைகளில் மேம்பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

---

a Printed as Appendix VII on pages 524–547.

30th March 1966]

பதில்கள்.—(அ) முதல் (எ) வரை: சபைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

A.—(a) to (d) :—A statement [a] is placed on the table of the house.

நூல்நிலையங்களுக்கான புத்தகங்கள்

7 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-66-ம் நிதி ஆண்டில் ஆகஸ்டு மாதம் முடிய தமிழக உயர்நிலைப் பள்ளியில் உள்ள நூல் நிலையங்களுக்கும் மாவட்டக் கிளை நூல்நிலையங்களுக்கும் அரசாங்கம் வாங்கித்தந்த புத்தகங்களுக்குச் செலவழித்தத் தொகை எவ்வளவு?

(இ) வாங்கித் தந்த புத்தகங்களின் பெயர்கள், அவற்றை இயற்றிய ஆசிரியர்களின் பெயர்கள், வெளியிட்ட கம்பெனியின் பெயர்கள் யாவை?

பதில்.—

(அ) ஒன்றும் இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

(a) Nil.

(b) Does not arise.

திருவிதாங்கூர்-கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள்

8 கேள்வி.—திரு. ஏ. சுவாமிநாஸ்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) திருவிதாங்கூர்-கொச்சியிலிருந்து சென்னை மாநிலத்திற்கு வேலை மாற்றி வந்த பட்டதாரி ஆசிரியர்கள் மொத்தம் எத்தனைபேர்?

(இ) அவர்களுள் எத்தனை பேருக்குத் தர உயர்வும், சம்பள உயர்வும், பதவி உயர்வும் அளிக்கப்பட்டுள்ளன?

(உ) அவர்கள் அனைவருக்கும் தர உயர்வு, சம்பள உயர்வு அளிக்கப்படாததன் காரணம் யாது?

பதில்.—(அ) 247; (இ) 23 பேருக்கு, மேல் பதவிக்கான உயர்வு அளிக்கப்பட்டது.

(உ) திருவிதாங்கூர்-கொச்சியிலிருந்து தமிழ்நாடு அரசாங்கப் பணிக்கு அனுப்பப்பெற்ற (allotted) ஏனைய அதிகாரிகள் அனைவரும் அவர்கள் இதற்கு முன் வகித்து வந்த பதவிகளுக்கு இணையான பதவிகளான துணை மேற்பார்வையாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் தரம்-II என்பன போன்ற பதவிகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தொடர்ந்து அதே பதவி

[a] Printed as Appendix VIII on pages 548–558

களில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் உயரிய சென்னைச் சம்பள விதங்கள் அகவிலைப்படி விதங்களில் சம்பளம் பெறுகின்றனர். அதாவது 1-6-1960-க்கு முன்னர் ரூ. 85—5—125— 1-6-1960-லிருந்து ரூ. 140-5-10-250 என்கிற உயரிய சம்பள விதத்தில் 1-6-60-லிருருந்து ரூ. 140-5-10-250 என்கிற உயரிய சம்பள விதத்தில் சம்பளம் அளிக்கப்படுகிறது. தங்கள் பதவிகளில் 1-வது தரத்திற்கோ அல்லது இத்துறையில் ஏனைய யாதொரு பதவிக்கோ அவர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பது பற்றி, மற்றவர்களுடன் அவர்களுடைய முறை வரும்பொழுது விதிகளுக்கிணங்க அதுகுறித்து யோசிக்கப்படும்.

(*a*) 247.

(**b**) Twenty-three persons have been promoted to higher categories.

(*c*) All the other allotted officers who were absorbed in the equated category of "Deputy Inspectors, School Assistants and Headmasters Grade II" continue to be in those categories. They have all been given the benefit of the increased Madras Scale of pay and rates of Dearness allowance (i.e.) Rs. 85–5–125–10–175 before 1st June 1960 and Rs. 140–5–180–10–250 from 1st June 1960. Their cases for promotion to Grade I in the category or to any other posts in the Service will be considered in their turn along with others in accordance with the rules.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION.

INVALIDATION OF THE MADRAS URBAN LAND TAX ACT BY THE HIGH COURT.

திரு. செ. மாதவன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட சென்னை நகர்ப்புற நிலவரிச் சட்டம் செல்லாது என்று அண்மையிலே உயர் நீதி மன்றத்தினால் தீர்ப்பு அளிக்கப்பட்டுவிட்டது. இப்படி தீர்ப்பளிக்கப்பட்டு சில நாட்கள் ஆகிவிட்டன. இதைப்பற்றி ஏதாவது அரசாங்கம் அறிவிக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். இதன் மூலம் கிட்டத்தட்ட ரூ. 45 லட்சம் வரி வசூலிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்தச் சட்டம் செல்லாது என்று தீர்ப்பு கூறப் பட்டுவிட்டதால், இந்த ரூ. 45 லட்சத்தைத் திருப்பிக் கொடுக்கக் கூடிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இது போன்ற நிலைமைகளில் ஏற்கனவே ஷுகர் கேன் செஸ் வாலிடேஷன் ஆக்ட் கொண்டு வந்தார்கள். அப்பொழுது இது போன்ற சூழ்நிலைகள் ஏற்பட்டன. அதே போன்று இந்தச் சட்டத்தின் கீழும் சூழ்நிலைகள் ஏற்பட்டிருக் கின்றன. இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரு வதற்காக நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரபணையை கொண்டு வர விரும்புகிறேன்.